ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தொல்காப்பியத்தில் காலமயக்கம்

74

**முனைவர் இரா.பாலகிருஷ்ணன்**
**இணைப்பேராசிரியர். தமிழ்த்துறை,**
**பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்**
**சென்னை.**

தமிழ் தொன்மையான இலக்கிய , இலக்கண வளங்களைக் கொண்ட மொழியாகும். பல்வேறு வகையான இயற்கை சீற்றங்களால் பெரும்பான்மையான நூல்கள் அழிந்து விட்டன. தொல்காப்பியர் இன்றைய மொழியியல் அறிஞர்கள் போற்றும் வகையில் பல்வேறு சிறப்புக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே பல இலக்கண இலக்கியங்கள் இருந்துள்ளமையை , என்ப, என்மார், என்றிசினோர் என்று கூறியுள்ள சொற்களால் அறிந்து கொள்ளலாம். தமிழரின் இலக்கண மரபைத் தொல்காப்பியத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். தொல்காப்பியம் எழுத்ததிகாரம் , சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களைப் பெற்றுள்ளது. எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் மொழியின் இலக்கணத்தை விளக்குகின்றன. இக்கால மொழியியலார் மொழியைப் பகுத்து விளக்கும் வகையிலேயே தொல்காப்பியமும் விளக்குவது குறிப்பிடத்தக்கது ஆகும். தொல்காப்பியர் வினையியலில் காலமயக்கத்தைப் பற்றி கூறியுள்ளார். வினைச்சொல்லானது வேற்றுமை உருபு ஏற்காது , காலத்தைப் புலப்படுத்தும். அத்தகைய காலம் காட்டும் வினைச் சொல்லானது பிறிதொரு காலத்திற்கு ஆகி வருவதைக் காலமயக்கம் எனலாம். இக்கால மயக்கத்தைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

1)தொல்காப்பியர் செய்து என்னும் இறந்த கால வினையெச்சம் எதிர்காலத்தில் மயங்கி வரும் என்பதைக் கீழ்காணும் நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

' செய்தென் எச்சத்து இறந்தகாலம்
எய்திடன் உடைத்தே வாராக்காலம்' (தொல். சொல். 234)

செய்து என்பது இறந்த கால இடைநிலையை (த்) பெற்று வந்துள்ளது. செய்து என்ற எச்சமானது வேறொரு வினைச் சொல்லினை முடிக்கும் காலத்து எதிர் காலத்தைப் பெறும் என்பதை அறியலாம்.

(எ.கா.)
செய்து வருவாய்
நீ உழுது வருவாய்

இதற்கு பல உரையாசிரியரும் விளக்கம் தருகின்றனர் 'செய்தென்' எச்சம் நிகழ்காலத்தி ;ற்கு ஏற்றது. 'கொடி ஆடித்தோன்றும் ' என்பதில் தோற்றம் , ஆட்டமும் உடன் நிகழுமாகலின் நிகழ்காலம் எதிர்காலம் எதிர்காலத்திற்கு ஏற்றது.

(எ.கா.) உழுது வருஞ் சாத்தன்

தெய்வச்சிலையார் இறந்த காலத்தாற் கூறப்படும். வினையது நிகழாத முன்னும் அவ்வாய்ப்பாட்டான் வரப்பெறும், எனவே எதிர்காலத்தைப் பெறுகிறது.

(எ.கா.) நாளை உழுது வருவன்

(2) மூன்று காலத்திற்கும் தோன்றும் இயற்கைப் பொருளை நிகழ்காலத்தில் கூறப்படுகிறது.

(எ.கா.) மலை நிற்கும், திங்கள் இயங்கும்

திங்களை போற்றுதும் (சிலப். 1)

(3) விரைவுப் பொருளை உணர்த்தும் போது இறப்பல்லாக் காலமாகிய எதிர்கால , நிகழ்கால வினைப்பொருள் இறந்த கால வினைப் பொருளோடு மயங்கும்.
இதனைத் தொல்காப்பியர்

'வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வருஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர் (தொல். சொல். 236)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

இவ்விளக்கத்தை உரையாசிரியர் கருத்து இரண்டு கால அடிப்படையில் அமைகின்றது. உணவு உண்ணக் காலந்தாழ்தல் எதிர்காலம் , உணவு உண்ணாது இருந்தவனை 'உண்டிலையோ' எனக் கேட்ட வழி உண்டேன், வந்தேன் எனக்கூறுதல் விரைவுப் பொளில் எதிர்காலம் இறந்த காலத்தில் மயங்குவதாகும். இதனைப் போன்றே உண்டு கொண்டிருத்தல் நிகழ்காலம் , இதனைப் போன்றே உண்டு கொண்டிருப்பவனை 'உண்டிலையோ' என வினைவிய வழி உண்டேன். வந்தேன் எனக்கூறுவது விரைவுப் பொருளில் நிகழ்காலம் இறந்த காலத்தில் மயங்குவதாகும்.

எதிர்காலம் நிகழ்காலம் இறந்தகாலம்

**விரைவுப்பொருள்**

(4) ஒரு செயலை செய்து முடித்தால் அல்லது இனிச் செய்தால் அதன் வழிக் கிடைக்கும் பலன் நிகழ்காலப் பொருளோடு மயங்கும். இதனைத் தொல்காப்பியர்

'மிக்கதன் மருங்கின் வினைச்சொற் சுட்டி
அப்பண்பு குறித்த வினைமுற்று கிளவி
செய்வது அல்வழி நிகழுங் காலத்து
மெய்பெறத் தோன்றும் பொருட்டு ஆகும்மே (தொல். சொல். 231)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

இளம்பூரணர் மிக்க பொருளை நிகழ்காலத்தில் மயங்கும் எனக் குறிப்பிடுகின்றார். 3 ஆனால் நச்சினார்க்கினியர் மிக்க பொருள் என்பதை இறந்த எதிர் காலப் பொருளாகக் கூறுவது பொருத்தமாக இருக்கின்றது என்கிறார்.

(எ.கா.)

தவம் செய்தான் சுவர்க்கம் புகாநிற்பன்

இறந்த காலம் நிகழ்காலம்

தவம் செய்வான் சுவர்க்கம் புகாநிற்பன்

எதிர் காலம் நிகழ்காலம்

(5) இறந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சியை நினைத்துப்பார்க்கும் போது எதிர்காலத்தோடு மயங்கும். இதனைத் தொல்காப்பியர்

'இறப்பே எதிர்வே ஆயிரு காலமும்
சிறப்பத் தோன்றும் மயங்குமொழிக் கிளவி'

(தொல். சொல். 242)
என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

(எ.கா.) யாம் பண்டு விளையாடுவது இக்கா

இறந்த காலம் எதிர்காலம்

இங்கு 'பண்டு' எனப்பெறும் காலகிளவியாகும். விளையாடுவது என்னும் எதிர்கால வினையாலணையும் பெயராகும்.

இறந்த காலமும் எதிர்காலமும் இயைந்து வருவதைப் போன்று இறந்த காலமும் நிகழ்காலமும் இயைந்து வரும் என்பதைத் தொல்காப்பியர்

'ஏனைக் காலமும் மயங்குதல் வரையார்' (தொல். சொல். 243)
என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார்.

(எ.கா.)
இவள் பண்டு இப்பொழிலகத்து விளையாடும்

இறந்தகாலம் நிகழ்காலம்

இவ்வாறு காலம் புலப்படுத்தும் வினைச்சொல் பிறிது காலத்திற்கும் ஆகிவருவது உண்டு என்பதை அறியலாம். இவற்றைத் தொல்காப்பியர் வினையியலில் குறிப்பிடுகின்றார்.

மொழி பயில்வோர்க்கு இலக்கணம் கற்றல் என்பது தலையாய கடமையாகும். எதிர்காலத் தமிழ் சீரிளமைக் குன்றாமல் இளந்தலை முறையினருக்குப் பயிற்றுவித்தல் தலையாய பண்பாகும். அதற்கான தமிழ் இலக்கண நூல்கள் உரைகள் எல்லாவற்றையும் தனித்தனிப் பகுதிகளாக இயல் இயலாகக் கூறி வகையை செய்து தொகுத்துத் தமிழிலக்கண ஆய்வு நெறிமுறையை உருவாக்குவது. இன்றைய ஆய்வாளர்கள் மேற்கொள்ள வேண்டிய ஆய்வுப் பணியாகும். இம்முறையில் தொல்காப்பியம் மற்றும் நன்னூலிலுள்ள வினைசொற்களை பற்றியக் கருத்துக்கள் வினையியலின் வழி ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது. நன்னூலில் வினைச் சொல்லினைப் பற்றிக் கூறும் போது காலமயக்கத்தை பவணந்தி முனிவர் கூறவில்லை. காலவழு, காலவழு அமைதி விளக்குகின்ற தனி நூற்பா இல்லை. காலமயக்கத்தைப் பற்றித் தெளிவான கருத்துக்களைத் தொல்காப்பியர் விளக்குகின்றார். என்பதை அறியலாம். மேலும் இவ்விரு நூல்களிலுள்ள ஒற்றுமையும் வேற்றுமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. காலமாற்றத்தால் சில வினைமுற்று ஈறுகள் பெற்றும் ,

அழிந்தும் காணப்படலாம். தவிர அதிக அளவு தொல்காப்பிய வினையியலும் , நன்னூலில் உள்ள வினையியல் கருத்துக்கள் மாறுபடுவதில்லை என்பதை இவ் ஆய்வு மூலம் அறியப்படுகிறது.

**அடிக்குறிப்பு**

தொல்காப்பியம் சொல்லதிகாரம்

தெய்வச்சிலையர் உரை நூ.எ. 234

சிலப்பதிகாரம் 1

இளம்பூரணர் உரை நூ.எ. 237

நச்சினார்க்கினியர் உரை நூ.எ. 237

**பார்வை நூல்கள்**

இளம்பூரணர் (உ.ஆ.) தொல்காப்பியம் - சொல்லதிகாரம்
திருநெல்வேலி சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் .சென்னை-1
முதற்பதிப்பு – 1963

சுபாஷ்;சந்தி;ரபோஸ். சு காலங்கள்
மெய்யப்பன் தமிழாய்வகம்,
சிதம்பரம் - 608 001.
முதற்பதிப்பு - 2001

சேனாவரையர் (உ.ஆ.) தொல்காப்பியம் - சொல்லதிகாரம்
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்
சென்னை -18
மறுபதிப்பு 1944

தெய்வச்சிலையார் (உ.ஆ) தொல்காப்பியம் சொல்லதிகாரம்
கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை
முதற்பதிப்பு – 1983

நச்சினார்க் கினியர்(உ.ஆ) தொல்காப்பிய சொல்லதிகாரம்
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
சென்னை-1
முதற்பதிப்பு – 1973